6.1.25 Page-5. தினமணி

# இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற பெண்களின் பங்களிப்பு அவசியம்

## மத்திய அமைச்சர் அன்னபூர்ணா தேவி

**கோவை, ஜன. 5:** இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதற்கு பெண்களின் தீவிரப் பங்களிப்பு அவசியம் என்று மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அன்னபூர்ணா தேவி தெரிவித்தார்.

கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனத்தின் 36-ஆவது பட்டமளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில், இளநிலை பிரிவில் 1,814 பேர், முதுநிலை பிரிவில் 624 பேர், முனைவர் பிரிவில் 33 பேர் என மொத்தம் 2,472 பேர் பட்டம் பெற்றனர். மேலும், பல்வேறு துறைகளில் முதல் மதிப்பெண் பெற்ற 91 பேருக்கு தங்கப் பதங்கம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற மத்திய அமைச்சர் அன்னபூர்ணா தேவி மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பேசியதாவது:

பிரதமர் மோடியின் தொலைநோக்குத் தலைமையின்கீழ் சுயசார்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய இந்தியாவைக் கட்டியெழுப்பும் விதமாக செயல்படுகிறோம். 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற வேண்டும் என்ற கனவை நனவாக்க அனைத்துத் துறைகளிலும் பெண்களின் தீவிரப் பங்களிப்பு அவசியம்.



கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவிக்கு பட்டம் வழங்கிய மத்திய அமைச்சர் அன்னபூர்ணா தேவி.

ஊட்டச்சத்து குறைபாடு, கல்வியறிவின்மை, பாலின சமத்துவமின்மை, பொருளாதார மேம்பாடு, உலகளாவிய காலநிலை ஆகிய சவால்களைக் கையாள்வதில் பெண்களின் தலைமை ஆரோக்கியமான, பாதுகாப்பான, சமமான சமூகத்துக்கு வழிவகுக்கும். தேசிய கல்விக் கொள்கை இந்த கருத்துகளையே எதிரொலிக்கிறது.

ஒரு குடும்பத்தை வளர்ப்பது, ஒரு நிறுவனத்தை நிர்வகிப்பது, தேசிய மற்றும் சர்வதேச தலைமையை ஏற்பது என எதுவாக இருந்தாலும் பெண்களின் முடிவுகள் வலுவாக இருக்கும். சவால்களில் இருந்து பெண்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில், கல்வி நிறுவனத்தின் வேந்தர் தி.ச.க.மீனாட்சிசுந்தரம், துணைவேந்தர் பாரதி ஹரிசங்கர், பதிவாளர் ஹெச்.இந்து உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.